முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1019

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

14.07.2022, வியாழக்கிழமை

1. அறமெனும் சக்திகொண்ட ஞானியே
அன்னதான வள்ளலே மாதவசியே
வரம்பெற்று என் சக்தியாக வாழும் அரங்கனே
வள்ளலே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானுமே சுபகிருது மிதுன திங்கள்
உயர்வான ஞான அறிவுரை ஆசி தன்னை
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 30 நாள், 14.07.2022 வியாழக்கிழமை)
ஞானவான் பலம் கூட எடுத்துரைப்பேன்
ஞானிகள் துணைபட இயக்குகின்ற அரங்கனின்
3. அரங்கனின் தர்மம் அனைத்தும்
இந்த உலகத்தை மாற்றி வழிநடத்தும்
மிகைபட அரங்கன் சன்மார்க்கமே
மேலான ஞானவான்களை படைத்து அருள் புரியும்
4. அருளாக ஆக்கமாக அனைத்துமாக
உலகை இயக்குகின்ற அரங்கன் சன்மார்க்கமே
பெருமளவில் உலகோரை ஞானவான்கள் ஆக்கி
பேரின்பகதிக்கு அழைத்துச்செல்லும்
5. செல்லவே இந்த வித அற்புதத்தை
சிறப்புற ஆறுமுகன் யான் அரங்கனை கொண்டு நடத்துவதாலே
ஆதலால் கலியுக மக்களெல்லாம்
அரங்கன் வாழ் ஓங்காரக்குடில் நோக்கி
6. வகைபட முறைசென்று வணங்கி
வல்லமைபட அரங்கன் தர்மத்தை ஏற்று
ஏற்று உலகமெங்கும் செய்துவந்தால்
இந்த பேருலகம் தர்மலோகமாகி
7. ஆகியே அரங்கன் அருளாலே ஞானலோக மாற்றங்கண்டு
அற்புதமாய் ஞான ஆட்சிக்குண்டான காலமாக மாற்றம் பெறும்
மாற்றத்தை அரங்கனை கொண்டு யான் நடத்துவதால்
மக்களே அரங்கனை நோக்கி வந்து ஆற்றல் பெற
8. ஆற்றல் பெற வேண்டி இனிதே
அரங்கன்வாழ் அற்புதக்குடிலில் தொண்டு செய்து
மாற்றத்துக்கான தீட்சை பெற்று வணங்க
மனிதர்களெல்லாம் மகான்கள் ஆகி சிறக்க நேரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–